# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.123/2020.
Prosecution witness for P.W.3.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. அழகு மாரியப்பன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2025.

Accused are present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கல்லூராணியில் குடியிருந்து ஆடு மேய்த்தல் தொழில் செய்து வருகிறேன். 12.04.2019 அன்று காலை சுமார் 10.30 மணியளவில் நான் முத்தையாபுரம் பகுதியில் ஆடு மேய்க்கச் சென்றேன். ஆடுகளுக்கு தழை அறுப்பதற்காக ஊருக்கு மேற்கே சென்றேன். அப்போது ஓடைக்கு கிழபுரமாக ஒரு பிரேதம் இருந்தது. இடது கையில் சதை இல்லாமல் இருந்தது. வயிறு ஊதிய நிலையில் இருந்தது. நான் பதற்றம் அடைந்துவிட்டேன். அதை ஊருக்குள் வந்து சொன்னேன். பின்னிட்டு கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. பிறகு நான் ஆடு மேய்க்கப்போய்விட்டேன். பிரேதத்தில் நீலநிற சட்டையும், பனியனும், ஊதா நிற பேண்ட்டும் இருந்தது. மறுநாள் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

முத்தையாபுரம் என்ற பகுதி எங்கள் ஊருக்கு வடக்கே உள்ளது. பிரேதத்தை நான் பார்த்ததாக சொல்லும் இடம் கல்லூராணிக்கு மேற்குபுறமாக உள்ளது. சங்கரன்கோவில் பிரதான சாலையிலிருந்து மேற்படி பிரேதம் சுமார் 1000 அடி தூரத்தில் இருந்தது. சங்கரன்கோவில் சாலையைக் கடந்துதான் முத்தையாபுரத்திற்கு ஆடு மேய்க்கப்போனேன்.

அந்த தேதியில் நான் 25 ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தேன். முத்தையாபுரம் காட்டில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தேன். முத்தையாபுரத்தில் ஆடு மேய்க்கச் செல்லும்போது போகிற போக்கில் பிரேதத்தை பார்த்தேன். எங்கள் ஊரிலிருந்து வடக்கே முத்தையாபுரம் உள்ளது. பிரேதம் எங்கள் ஊருக்கு மேற்கே இருந்தது. அருகே சென்ற பிறகுதான் பிரேதம் இருந்தது தெரியவந்தது. அப்போது என்னுடன் யாரும் இல்லை. நான் பார்த்தவுடன் பயந்து ஓடிவந்துவிட்டேன். மேற்படி உடைகளை பார்த்துவிட்டுதான் வந்தேன். ஊர் பெரியவர்களிடம் சொன்னேன். மகேந்திர ராசு என்ற நாட்டாமையிடம் சொன்னேன். வேறு யாரிடமும் சொல்லவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. நான் மீண்டும் அந்த இடத்திற்கு போகவில்லை. கிராம நிர்வாக அலுவலரையும், அவரது உதவியாளரையும் நான் பார்க்கவில்லை. ஆடு மேய்த்துவிட்டு பகல் 2 மணியளவில் திரும்பி வந்தேன். அதுகுறித்து யாரும் என்னிடம் விசாரிக்கவில்லை. மறுநாள் இரவு 8 மணியளவில் போலீசார் என்னை என் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். என்னிடம் விசாரித்து கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். எழுதிய தாளில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அதில் என்ன எழுதியிருந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. நான் ஆடு மேய்ப்பவர் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக சிறார் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்துள்ளேன். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் பிரேதத்தை பார்க்கவில்லை என்றும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. போலீசார்என்னை விசாரிக்கவில்லை என்றும், நான் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 1ம் எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.10.09 17:52:26 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.123/2020.
Prosecution witness for P.W.4.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.மாணிக்கம். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2025.

Accused are present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது காலாம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு வானரமுட்டி கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது 12.04.2019 அன்று காலை சுமார் 10.30 மணியளவில் கல்லூரணி அருகில் வேப்பமரத்தடியில் ஒரு ஆண் பிரேதம் கிடப்பதாக தகவல் வந்தது. நானும், என் உதவியாளரும் இருசக்கர வாகனத்தில் சென்று அங்குபோய் பார்த்தோம். பிரேதம் இருந்த இடம் வானரமுட்டி கிராமம் புல எண் 226/1-ல் இருந்ததாக சாட்சி சொல்லிவிட்டு மீண்டும் புல எண் 256/1ல் இருந்ததாக மாற்றிக் கூறுகிறார். பிரேதம் அழுகிய நிலையில் இருந்தது. வைலட் நிற முழுக்கை சட்டை அணிந்திருந்தது, வெள்ளைநிற முண்டா பனியன் அணிந்திருந்தது, ஊதா நிற ஜீன்ஸ் பேண்ட் அணிந்திருந்தது. மேற்கு பக்கம் தலையும், கிழக்கு பக்கம் காலுமாக இருந்தது. வலது மேல் கையில் புஜம் வரையில் சதையில்லாமல் எலும்பு தெரிந்தது. இடது மணிக்கட்டிலிருந்து முழங்கை வரை சதையில்லாமல் இருந்தது. பிரேதத்தை இறந்துபோனவரின் தகப்பனாரான அ.சா.1 அடையாளம் காட்டினார். மேல் அதிகாரிகளுக்கு நான் உடனே தகவல் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

மகேந்திரன் என்ற கல்லூரணிக்காரர் எனக்கு கைபேசி மூலம் தகவல் சொன்னார். கல்லூரணி அருகில் வேப்ப மரத்தடியில் ஆண் பிரேதம் கிடப்பதாக எனக்குச் சொன்னார். அவருக்கு அ.சா.3 தகவல் சொன்னதாக என்னிடம் சொன்னார். அந்த சங்கதியை போலீஸ் விசாரணையில் சொன்னேன். போலீசாரும், நானும் சேர்ந்துதான் மேற்படி இடத்திற்கு சென்றோம். போலீசார் எப்படி வந்தார்கள் என்றால் அவர்களுக்கும் தகவல் வந்ததாக சொன்னார்கள். நான் பிரேதத்தை பார்த்துவிட்டு போலீசாருக்கு தகவல் சொல்லவில்லை. நான் பார்த்த மேற்படி சங்கதி குறித்து ஒரு அறிக்கை தயார் செய்ய வேண்டும். அதை வட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டும். நான் அவ்வாறு தகவலை வட்டாட்சியருக்கு அனுப்பினேன். அதன் நகலை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை. அதை போலீசாரும் கேட்கவில்லை. நான் மேற்படி இடத்திற்கு போகும்போது ஊர்க்காரர்கள் நிறையபேர் இருந்தார்கள். மேற்படி மகேந்திரன் இல்லை. நாங்கள் சென்று சுமார் 30 நிமிடம் கழித்து பிரேதத்தின் உறவினர்கள் வந்தார்கள். அ.சா.1 உடன் சிலபேர் வந்தார்கள். அ.சா1 அவரது தகப்பனார் என்பது எனக்கு எப்படி தெரியும் என்றால் அ.சா.1 தான் என்னிடமும், போலீசாரிடமும் சொன்னார். அ.சா.1 உடன் வந்தவர்கள் எத்தனை பேர் என்றும், அவர்கள் யார் என்றும் எனக்குத் தெரியாது. பிரேதம் அழுகிய நிலையில் இருந்தது. ஆனால் முகத்தை பார்த்து அடையாளம் சொல்லமுடியும். முகத்தைப் பார்த்துதான் அ.சா.1 இறந்துபோனவர் தன் மகன் என்று சொன்னார். அந்த விபரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. எவ்வளவு நாளுக்கு முன்பாக அந்த நபர் இறந்துகிடந்தார் என்றால் எனக்குத் தெரியாது. வேறு எந்த விபரமும் அ.சா.1 என்னிடம் சொல்லவில்லை. அ.சா.1 மேற்படி நபர் எப்போது காணாமல் போனார், எப்போது தேடினோம், எப்போது வந்தார் என்ற

விபரங்களை என்னிடம் சொல்லவில்லை. மாலை 5 மணி வரையில் நான் மற்றும் போலீசார் அங்கேயேதான் இருந்தோம். பிரேதத்தை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு போலீசார் எடுத்து வந்தார்கள். அதற்கு முன்பாக தடயவியல் ஆய்வாளர்கள் வந்து பார்த்த பிறகுதான் பிரேதத்தை எடுத்துச் சென்றார்கள். அந்த விபரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. நான் வட்டாட்சியருக்கு அனுப்பிய அறிக்கையின் நகலை தயாரிக்கவில்லை. நான் வட்டாட்சியருக்கு அறிக்கை அனுப்பியிருந்தால் அதற்கான அலுவலக நகலை நான் வைத்திருப்பேன் என்றால் சரியல்ல. மேற்படி நிலத்தில் பருத்தி அறுவடை முடிந்து அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாக இருந்தது. அந்த விபரத்தையும் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. சம்பந்தப்பட்ட நபர் போலீசில் புகார் கொடுத்தாரா என்பது எனக்குத் தெரியாது. அதுகுறித்து சம்பந்தப்பட்ட நபர் என்னிடம் சொல்லவும் இல்லை. சம்பந்தப்பட்ட நபர் இந்த வழக்கு சம்பந்தமாக மேற்கொண்டு என்ன செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது. போலீசார் என்ன செய்தார்கள் என்றும் எனக்குத் தெரியாது. பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எந்த தகவலும் எனக்கு கிடைக்கவில்லை என்றும், நாங்களும் மேற்படி இடத்திற்கு சென்று எதையும் பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் மேற்படி பிரேதத்தை பார்க்கவில்லை என்பதால்தான் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 1ம் எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.10.09 17:52:36 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.